1981 மார்ச் 24]

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உள்நாட்டிலுள்ள பனை மரங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து முடிவில் வெற்றி கிடைக்கவில்லையென்று சொன்னால், அதன் பிறகு தான் வெளி நாட்டிலுள்ள பனை மரங்களை வளர்த்து அதிலிருந்து எண்ணெய் தயாரிப்பதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். அது தான் நியாயம். ஆனால் பனை மரங்கள் நம்முடைய நாட்டிலே இன்றைய தினம் ஏராளமாக, அபரிதமான அளவுக்கு இருப்பதால், ஏன் உள்நாட்டிலேயே உள்ள மரங்கள் பற்றி ஆய்வு செய்யவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : வெளி நாட்டிலுள்ள பனை மரங்கள்பற்றி ஆய்வு செய்வதாக நிதி நிலை அறிக்கையில் வாசகம் இல்லை. தவிரவும் அதுபற்றி இதுவரை ஆராயவும் இல்லை. ஆனால் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பனைமரத்திலிருந்து எண்ணெய் தயாரிப்பதுபற்றி மிகவும் தீவிரமாக இருப்பதால். அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(1) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி மாணவர்கள் நடத்தும் கிளர்ச்சி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், க. இராமமூர்த்தி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசாப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தென்னாற்க்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி கிளர்ச்சி செய்வது குறித்தும், பிரச்சினை தீர வழிவகை காண்பது குறித்தும்".

192 தென்னாற்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி மாணவர்கள் நடத்தும் கிளர்ச்சி குறித்து.

[1981 மார்ச் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அவை முன் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, இந்த விவர அறிக்கை மிகவும் சுருக்கமாக இருக்கிறது. ஆனால் வேண்டிய விவரங்கள் அதிகமாக இருக்கின்றன. மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் இணைந்துதான் இன்றையதினம் இந்தப் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு புரமோஷன் கொடுப்பது பற்றியும், பள்ளிகளினுடைய கால அட்டவணைகளைத் தயாரிப்பது பற்றியும், கேள்வித் தாள் தயாரிப்பது பற்றியும், அக்காடமிக் ஓர்க் பற்றியும் ஆசிரியர்களைக் கலந்து செய்ய வேண்டும் என்பது தான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகள். அதுபோல மாதம் ஒருமுறையாவது 'ஸ்டாப்' கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது மிகச் சாதாரண உரிமையை நிலைநாட்டக் கூடிய ஒரு சிறிய பிரச்சினை. இதுபற்றி மாணவர்களும் கேட்டிருக்கிறார்கள். 12—2—1981 அன்று நிர்வாகிகள், ஆசிரியர் மற்றும் மாணவப் பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள் மற்ற பிரமுகர்கள் எல்லாம் கூடி பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 12—2—1981 அன்று எடுக்கப்பட்ட முடிவை பள்ளி நிர்வாகிகள் மதிக்கவில்லை என்பது தான். அதன்பிறகு பள்ளிக்கூடத்தில் சலசலப்பு, சுமுகமற்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக மாவட்ட ஆட்சித் தலைவருடைய முன்னிலையிலே நடைபெற்ற அந்த ஒப்பந்தத்தையே அந்த நிர்வாகம் மதிக்கவில்லை. இது குறித்து கல்வித் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லது எடுக்கப்போகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாவட்ட ஆட்சியர் 12—2—1981 அன்று பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர் மற்றும் மாணவர் பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள் மற்ற பிரமுகர்கள் ஆகியோரின் கூட்டத்தைக் கூட்டி பிரச்சினைகள் சம்பந்தமாக சில முடிவுகளை எடுத்தார். அம்முடிவுகளின் அடிப்படையில் பள்ளி 16—2—1981 முதல் திறக்கப்பட்டு சுமுகமாக நடைபெற்று வருகிறது என்று அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். அதன்பிறகு பள்ளியில் சலசலப்பு, சுமுகமற்ற நிலை இருக்கிறது என்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். இந்த அரசு இதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

@ 247-248 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தென்னாற்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில், பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி மாணவர்கள் நடத்தும் கிளர்ச்சி குறித்து.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு நல்ல குறிப்பு மாண்புமிகு கல்வி அமைச்சரது அறிக்கையிலே இருக்கிறது. தாளாளர் பள்ளிக்கூடத்திற்கு என்று அமைக்கப்பட்ட பணியாளர் குழுவையே ரத்து செய்து விட்டதாக மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அறிவித்திருக்கிறார். ஆனால் அவர் அப்படி ரத்து செய்ததற்கான காரணத்தைச் சொல்லவில்லை. இதுபற்றி மாவட்டக் கல்வி அதிகாரி நிர்வாகத்திடம் "ஏன் ரத்து செய்திருக்கிறீர்கள் ?" என்று விளக்கம் கேட்டிருக்கிறார். அவர் அதற்கு எந்தவித பதிலும் சொல்லவில்லை. அதுபற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கல்வித் துறையை அந்த நிர்வாகம் கொஞ்சம் கூட மதிக்கவில்லை என்பதைத்தான் இது தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. மைனாரிட்டி நிர்வாகத்தில் இருப்பவர்கள் எல்லாம் இம் மாதிரி நடந்துகொள்கிறார்கள். வக்ப் போர்டில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி யிருப்பது மாதிரி இம்மாதிரி சிறுபான்மை நிர்வாகங்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வந்து கட்டுப்படுத்த அரசு முன்வருமா? அப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தினால், இம்மாதிரி தவறு செய்யும்போது அல்லது பிரச் சினைகள் வரும்போது, உடனடியாக அரசு தலையிட்டு நிவாரணம் காண ஏதுவாக இருக்கும் என்பதால் இதுபற்றிப் பரிசிலனை செய்யப்படுமா ?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெரிய அளவிலே பரிசிலனை செய்வதற்கு நிறைய செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக் கிறார்கள். கல்வித் துறையைப் பொறுத்தவரையில், கல்வித் துறையின் விதி களுக்கு உட்பட்டு அதிகாரிகள் அந்த நிர்வாகத்தினரை யார் என்று பார்க்காமல் உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பள்ளிக்கூடம் சிறந்த முறையிலே நடை பெற முயற்சி எடுப்பார்கள்.

(2) மதுரை சட்டக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையாலும் மாணவர் இல்ல வசதி இல்லாமையாலும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மதுரை சட்டக் கல்லூரியில் போதிய ஆசிரியர்கள் இல்லாமையாலும் மாணவர் இல்ல வசதியும் ஏனைய வசதிகளும் போதிய அளவு இல்லாமையாலும் அம் மாணவர்கள் தங்களுடைய கல்வியை தொடர்வதில் ஏற்பட்டுள்ள இன்னல், இடர்பாடுகள் குறித்து

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.